# IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.

## I.A.No. 3/2025 in O.S.No. 196 Of 2013

| | | |
|---|---|---|
| **Witness Rank** | **:** | PW1 |
| **Name of the Witness** | **:** | ராமலிங்கம் |
| **Father's Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Occupation** | **:** | |
| **Address** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 20th day of April, 2026.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை :-

எனக்கு தமிழ் சரியாக எழுத படிக்க தெரியாது. எனது மனைவி பெயர் ராணி என்றால் சரிதான். எனக்கு ராஜகோபால், தவமணிகண்டன் என 2 மகன்கள் என்றால் சரிதான். ராஜகுமாரி, ராஜேஸ்வரி, விசாலாட்சி, கசப்பு, ஜெயந்தி என 5 மகள்கள் என்றால் சரிதான். எனது மனைவி ராணி மற்றும் எனது மகள்கள் விசாலட்சி, கசப்பு, ராஜகுமாரி, ஜெயந்தி ஆகியோர் என் மீதும் எனது மகன்கள் மற்றும் இதர மகள்கள் மற்றும் கிரைய தாரரான அம்சாயிஅம்மாள் மீது பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு முதலில் தெரியாது. பிறகு தான் தெரியும். தாவா சொத்தில் 5வது இன சொத்தான சர்வே எண் 21/2 என்ற சொத்தை 14.06.2007 அன்று அம்சாயிஅம்மாளுக்கு நான் விற்பனை செய்துவிட்டேன் என்றால் சரிதான். எனது மகள்கள் மற்றும் மனைவி எனக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த விவரம்

எனக்கு சொன்னார்கள் என்றால் சொல்லவில்லை. அந்த சமயத்தில் நாங்கள் ஒன்றாகத் தான் இருந்தோம் என்றால் சரிதான். 2007-ல் என் மனைவியும் அவரது சகோதரர்களும் என்னை வீட்டை விட்டு வெளியே அனுப்பிவிட்டார்கள். இந்த விவரத்தை சாட்சி தாமாக கூறினார். இது குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். அதற்கு ஆதாரமாக நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு நரம்பு பிரச்சினை என்று எனது மனுவில் நான் கூறியுள்ளேன் என்றால் அது போல் எந்த பிரச்சினையும் எனக்கு இல்லை. தாவா சொத்தை அத்துக்கட்டி அளந்து பார்க்க நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்திற்கு வந்தார் என்றால் சரியல்ல. நான் தற்போது திருவதிகை கிராமத்தில் குடியிருக்கிறேன். எனது மனைவி மற்றும் பிள்ளைகள் தாவா சொத்து உள்ள கொடுக்கன் கிராமத்தில் வசிக்கிறார்கள். திருவதிகை மற்றும் கொடுக்கன் கிராமத்திற்கு இடையே 20 கிலோ மீட்டர் இருக்கும். என் மனைவி என்னை அடித்து துன்புறுத்தியாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு விவரம் எனக்கு தெரியும் என்றாலும் எனக்கு வழக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காலதாமதத்திற்கான நாட்களை ஒருதலைபட்ச உத்தரவு தேதியில் இருந்து கணக்கிடாமல் தவறாக எனக்கு பின்னிட்டு தான் தெரியும் என பொய் விவரம் கூறி தவறான நாட்களை கணக்கிட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று

சொன்னால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கை நடத்த கட்சி எதுவும் இல்லாததால் நான் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்க விட்டு விட்டு தற்போது பொய் விவரங்கள் கூறி பொய் மனு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*